







## சென்னை கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில் நலத்திட்ட உதவிகள்:

# அனைவருக்குமான அரசாக இருப்பதுதான் 'திராவிட மாடல்' அரசு!

## பெரியார் திடலில் நடைபெற்ற விழாவில்
## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

***சென்னை,நவ.28-***

***சென்னை கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில், பெரியார் திடலில் நடைபெற்ற பிறந்த நாள் நிகழ்ச்சியில், கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழிகளையும், ஏழை - எளிய மக்கள் - மாற்றுத்திறனாளிகள் - திருநர்கள் - தூய்மைப்பணியாளர்கள் - சுகாதாரப்பணியில் ஈடுபடுவோருக்கு நலத்திட்ட உதவிகளையும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின்வழங்கி சிறப்புரையாற்றினார்.***

***அப்போது அவர், ``அனைவருக்குமான அரசாக, அனைத்துச் சமுதாயத்துக்குமான அரசாக இருப்பதுதான் திராவிட மாடல் அரசு என்று நம் தலைவர் அவர்கள் சொல்வார். எனவே, இந்த நிகழ்ச்சி எனது பிறந்தநாள் விழாவாக இருந்தாலும், திராவிட மாடல் அரசின் எடுத்துக்காட்டு நிகழ்ச்சியாக இந்த நிகழ்ச்சி நடந்துகொண்டிருக்கிறது" என்று குறிப்பிட்டார்.***

***துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:***

நான் இன்று இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வாழ்த்துவதை விட, உங்களின் வாழ்த்துகளைப் பெறுவதற்காக வந்துள்ளேன். முதலில் உங்களின் வாழ்த்துகளுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணன் சேகர்பாபு அவர்களுக்கு இந்த நேரத்தில் எனது பாராட்டுகள், வாழ்த்துகள், நன்றிகள். ஏனென்றால், வருடந்தோறும் தன் மாவட்டத்தில், ஏதாவது ஒரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து, 365 நாட்களும் தொடர்ந்து நலத்திட்ட நிகழ்ச்சிகளை நடத்துபவர் அண்ணன் சேகர்பாபு அவர்கள். அந்த 365 நாட்களில் எப்படியும் 35 நாட்கள் என்னை வைத்து நிகழ்ச்சியை நடத்துவார்.

### பிறந்தநாள் நிகழ்ச்சி

முப்பெரும் விழா, கலைஞர் பிறந்த நாள், தலைவர் பிறந்தநாள், கலைஞர் நினைவு நாள், பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்ற நிகழ்ச்சிகளை வருடம் முழுவதும் நடத்துவார். அவர் என்னை அழைக்காமல் இருப்பது ஒரேயொரு நிகழ்ச்சிக்குத்தான். அது என் பிறந்தநாள் நிகழ்ச்சி. இப்போது அதற்கும் என்னைத் தொடர்ந்து அழைக்கிறார். அவருக்கு ஒரு வேண்டுகோள். அவரின் பிறந்தநாளுக்கு ஒரு நிகழ்ச்சி நடத்தி, அதற்கு என்னை அழைக்க வேண்டும்.

இன்றைக்கு இந்த மேடையில், மூத்த முன்னோடிகளுக்குப் பொற்கிழி, கல்லூரி மாணவ, மாணவிகளுக்குக் கல்வி ஊக்கத்தொகை, ஆசிரியர்களுக்கு நலத்திட்டம், சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த சகோதரிகளுக்குப் புத்தாடை, சுயநிதி மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட நிகழ்ச்சி, ஐந்து கருணை இல்லங்களுக்கு உதவித் தொகை, விளையாட்டு வீரர்களுக்கு உபகரணங்கள், அங்கன்வாடி ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களுக்கு உதவித்தொகை, செவிலியர்களுக்கு உதவித்தொகை, திருநங்கைகளுக்கு உதவித்தொகை, கழகத்திற்காக உழைத்துப் பாடுபட்ட, மறைந்த மூன்று மகளிர் நிர்வாகிகளின் குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்குகிறோம்.

### அனைவருக்குமான அரசு

நமது அரசை நாம் திராவிட மாடல் அரசு என்று அழைக்கிறோம். திராவிட மாடல் அரசு என்றால், என்னவென்று ஒரு சிலர் கேட்பார்கள். அனைவருக்குமான அரசாக, அனைத்துச் சமுதாயத்துக்குமான அரசாக இருப்பதுதான் திராவிட மாடல் அரசு என்று நம் தலைவர் அவர்கள் சொல்வார். எனவே, இந்த நிகழ்ச்சி எனது பிறந்தநாள் விழாவாக இருந்தாலும், திராவிட மாடல் அரசின் எடுத்துக்காட்டு நிகழ்ச்சியாக இந்த நிகழ்ச்சி நடந்துகொண்டிருக்கிறது.




இன்று காலை எழுந்து, நம் தலைவர் கலைஞர், பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார் ஆகியோரின் நினைவிடத்துக்குச் சென்று அஞ்சலி செலுத்திவிட்டு, நம் கழகத் தலைவர் அவர்களையும், எனது அம்மாவையும் இன்னும் நான் சந்திக்கவில்லை. அம்மாவையும், அப்பாவையும் சந்திப்பதற்கு முன்பு, குடும்பத்தில் மூத்தவர்களாக இருக்கக்கூடிய என் சொந்தக்காரர்கள் உங்களைச் சந்தித்து, உங்களின் வாழ்த்துகளைப் பெறுவதற்கு இங்கு வந்துள்ளேன்.

### முதல் நிகழ்ச்சி– ஒரே நிகழ்ச்சி

இன்று இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, உங்களை எல்லாம் சந்திப்பதில் எனக்கு கூடுதல் மகிழ்ச்சி. அண்ணன் சேகர்பாபு அவர்கள் சொன்னார்கள். இன்று, முதல் நிகழ்ச்சியாக உங்களைச் சந்திக்க நான் வந்துள்ளேன் என்று. முதல் நிகழ்ச்சி கிடையாது, இன்றைக்கு ஒரே நிகழ்ச்சி இந்த நிகழ்ச்சிதான். இதன்பிறகு நம் இயக்கத்தைச் சேர்ந்த உடன்பிறப்புகள் அனைவரையும் சந்தித்து, அவர்களின் வாழ்த்துகளைப் பெற இருக்கிறேன். எனவே, வந்துள்ள உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகள்.

சென்னை கிழக்கு மாவட்டம் சார்பாக இந்த நலத்திட்டங்களை இன்று நீங்கள் பெற்றுள்ளீர்கள். இதன் மூலம் நீங்கள் பயன்பெற்று நாளை நான்கு பேருக்கு நலத்திட்டங்களை வழங்கும் நிலைக்கு உங்களை நீங்கள் உருவாக்கிக்கொள்ள வேண்டும். அதற்கு நம் அரசும், முதலமைச்சர் அவர்களும் உங்களுக்குத் துணை நிற்பார்கள். அண்ணன் சேகர்பாபு அவர்கள் எப்போதும் உங்களுக்குத் துணை நிற்பார்கள்.

இதே எழுச்சி, உணர்வுடன் அடுத்த ஐந்து மாதங்கள் களத்தில் பணியாற்றிட வேண்டும். இப்போது எஸ்.ஐ.ஆர் பணிகள் நடக்கின்றன. அதில் உங்களின் வாக்குகளை முதலில் நீங்கள் உறுதி செய்துகொள்ள வேண்டும். உங்களின் உறவினர்கள், நண்பர்கள் வாக்குகளை எல்லாம் உறுதி செய்ய வேண்டும். அந்தப் பணிகளில் அண்ணன் சேகர்பாபு அவர்களின் தலைமையில் சிறப்பான செயல்பாடுகள் நடைபெற்று வருகின்றன என்று செய்திகள் வருகின்றன. இருந்தாலும், நான்கு மாத காலம் மிக மிக முக்கியமான காலம்.

நமக்குத் தலைவர் கொடுத்த இலக்கு 'வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு' என்பதுதான். அதையே எனது பிறந்தநாள் வேண்டுகோளாக வைத்து, அந்த இருநூறு தொகுதிகளில், இந்த கிழக்கு மாவட்டத்தில் இருக்கின்ற அனைத்துத் தொகுதிகளிலும், வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் நம் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வெற்றி, வெற்றி என்று வர வேண்டும். அதுவே நமது இலக்கு என்று கூறிக்கொண்டு, வாய்ப்பளித்த அண்ணன் சேகர்பாபு அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர் பி.கே. சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், வெற்றியழகன், மாநகராட்சி மேயர்கள் பிரியா, தினேஷ்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ரவிச்சந்திரன், ரங்கநாதன், கழக நிர்வாகிகள் தமிழன் பிரசன்னா, பரிதி இளம்சுருதி, உமாகாந்த், ஷேக் அப்துல்லா, நன்மாறன், பகுதிச் செயலாளர்கள் சுதாகர், வேலு,


இளைஞர் அணி அமைப்பாளர் வானவில் விஜய், தொகுதிப் பார்வையாளர்கள் யாழினி, கிருஷ்ணமூர்த்தி, முனியாண்டி, நரேந்திரன் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்துகொண்டனர்.



துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு சேப்பாக்கம் பகுதி கழக செயலாளர், 9வது மண்டல குழு தலைவர் எஸ்.மதன்மோகன் எம்.சி. ஏற்பாட்டில் சேப்பாக்கம் பகுதியில் அமைந்துள்ள கஸ்தூரிபாய் தாய் சேய் மருத்துவமனையில் நேற்று (27.11.2025) அன்று பிறந்த அனைத்து குழந்தைகளுக்கு தங்க மோதிரமும் குழந்தைகள் உபகரண பரிசு பெட்டகமும் நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன் வழங்கினார். உடன் சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, வட்டக் கழக செயலாளர் ஏ.தமீம்அன்சாரி, ஆர்.ஜெகதீசன், கே.மகேஷ், பி.பிரபாகரன், கே.கோபி, ஜி.வெங்கடேசன், பகுதி நிர்வாகிகள், வட்ட நிர்வாகிகள் பல்வேறு அணிகளின் மாவட்ட, பகுதி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



கழக இளைஞரணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்தநாளை முன்னிட்டு, கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளரும் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவருமான தயாநிதி மாறன் எம்.பி. வாழ்த்தினார். உடன் சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும் பெருநகர சென்னை மாநகராட்சியின் பணிகள் நிலைக்குழுத் தலைவருமான நே.சிற்றரசு மற்றும் கழக முன்னணியினர் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளினை முன்னிட்டு கழக சட்ட துறையின் சார்பில் உயர்நீதிமன்ற எதிரே உள்ள ஒய் எம் சி ஏ அரங்கத்தில் கழக சட்ட துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ எம்.பி. தலைமையில் கழக சட்ட துறை தலைவர் மூத்த வழக்கறிஞர் ஆர்.விடுதலை முன்னிலையில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதி கலந்து கொண்டு கேக் வெட்டி கலந்து கொண்ட வழக்கறிஞர்கள் அனைவருக்கும் அறுசுவை உணவு வழங்கப்பட்டது இந்த நிகழ்வில் கழக சட்ட துறையின் இணை செயலாளர்கள், துணை செயலாளர்கள்,தலைமை கழக வழக்கறிஞர்கள், வழக்கறிஞர் அணியின் மாவட்ட நிர்வாகிகள் மற்றும் ஏராளமான வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, நேற்று (27.11.2025) சென்னை, பாரிமுனை, ராஜா அண்ணாமலை மன்றத்தில் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் மேயர் திருமதி.ஆர்.பிரியா ராஜன் ஏற்பாட்டில் மக்கள் நீதி மய்யத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பத்மஸ்ரீ கமல்ஹாசன் அவர்கள் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு கல்வி ஊக்கத்தொகை மற்றும் உபகரணங்கள், கர்ப்பிணி பெண்களுக்கு பேறுகால உதவிகள் மற்றும் திருநங்கைகளுக்கு உதவித்தொகை வழங்கி சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் மதுரை உலக தமிழ் சங்கத்தின் துணைத் தலைவர் முனைவர் பர்வீன் சுல்தானா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றி அழகன், ஜோசப் சாமுவேல், இளைஞரணி மாவட்ட அமைப்பாளர் வானவில் விஜய், துணை அமைப்பாளர் ஜெகதீஷ், பகுதி செயலாளர்கள் எஸ்.முரளி, ராஜசேகர், வட்ட செயலாளர் சதீஷ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.